**செப்டம்பர் - 10**

# TNPSC துளிகள்

- மத்திய அரசாங்கமானது பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் கீழ் குழந்தைப் பருவ புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.
- இந்திய உச்ச நீதிமன்றமானது ஒருவர் தனது வாகனத்தை விற்கும் போதும் பதிவு செய்யும்போதும் மூன்றாம் நபருக்கான காப்பீட்டுக் கொள்கையாக நான்கு சக்கர வாகனங்களுக்கு 3 வருட காப்பீட்டுக் கொள்கையும் இரு சக்கர வாகனங்களுக்கு 5 வருட காப்பீட்டுக் கொள்கையும் அவசியம் என்று அறிவித்துள்ளது.
    - உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி K.S. ராதாகிருஷ்ணன் தலைமையிலான சாலை பாதுகாப்பு மீதான உச்சநீதிமன்ற குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- ஆயுஷ்மான் பாரத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான (CEO - Chief Executive Officer) டாக்டர் இந்து பூஷன் என்பவரால் ஆயுஷ்மான் பாரத் தகவல் அளிக்கும் மையம் பெங்களூருவில் தொடங்கப்பட்டது.
- இந்தியாவின் ஏஸ் ஸ்பிரிண்டரான ஹீமா தாஸ் வட கிழக்கு மாநிலத்தின் வளரும் விளையாட்டு வீரர்களை பெரிதாக சாதிப்பதை ஊக்குவிக்கும் வகையிலும் இளைய தலைமுறையினர் விளையாட்டை தீவிரமாக பின்பற்றும் வகையிலும் அஸ்ஸாமின் விளையாட்டுத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- நோவாக் ஜோகோவிக் தனது மூன்றாவது அமெரிக்க ஓபன் பட்டத்தைப் பெற்றார். இவர் உலகத் தரவரிசையில் ஜூவான் மார்ட்டின் டெல் போட்ரோவை வீழ்த்தி ஒட்டுமொத்தமாக 14-வது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தைப் பெற்றார்.

# தேசியச் செய்திகள்

## நீடித்த இந்திய பொலிவுறு நகரங்கள் மாநாடு

- 4-வது நீடித்த இந்திய பொலிவுறு நகரங்கள் மாநாடு பெங்களூருவில் நடைபெற்றது.
- இம்மாநாடு பொலிவுறு நகரத் திட்டம், மத்திய அரசாங்கம், சுவச் பாரத், கர்நாடகா நகர கட்டமைப்பு வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் கர்நாடக நகர மேலாளர் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் நடத்தப்பட்டது.
- இம்மாநாட்டில் இந்திய பொலிவுறு நகர திட்டங்கள் மீதான நடவடிக்கைகள், சீர்திருத்தங்கள், வளர்ச்சி மற்றும் தடைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.
- மேலும் இது நகர்ப்புற வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக பொருட்கள், சேவைகள், தொழில்நுட்பத்தின் கூட்டுச் செயல்பாடு மற்றும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்வதில் கவனம் செலுத்தியது.

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேச முதியோர் எலும்பியல் கருத்தரங்கு

- டெல்லியின் அனைத்து இந்திய மருத்துவ நிறுவனத்தில் 6வது சர்வதேச முதியோர் எலும்பியல் இந்திய சமூகக் கருத்தரங்கை மத்திய உள்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இக்கருத்தரங்கின் கருத்துருவானது, "எலும்புமுறிவைக் குறைத்தல் மற்றும் மேம்பட்ட இயக்கம் ஆகியவற்றால் நீண்ட ஆயுட்காலத்தை அதிகப்படுத்துதல்".
- முதியோர்களின் ஆரோக்கியத்திற்கு முதியோர் மருத்துவம் கவனம் செலுத்துகிறது. வயதான முதியோர்களில் நோய்களையும் இயலாமைகளையும் தடுத்து குணப்படுத்தி அவர்களது உடல்நலத்தை அதிகரிக்க எண்ணுகின்றது.
- முதியோர் எலும்பியல் இந்திய சமூகத்திற்கான முதலாவது தேசியக் கருத்தரங்கு 2013-ல் பெங்களூருவில் நடைபெற்றது.

## அங்கீகாரம் மீதான உலக மாநாடு (WOSA - 2018)

- புதுதில்லியில் அங்கீகாரம் மீதான உலக மாநாடு (WOSA- World Summit on Accreditation) மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இம்மாநாடு தேசிய அங்கீகாரக் குழுவினால் (NBA - National Board of Accreditation) நடத்தப்பட்டது.
- இம்மாநாட்டின் கருத்துருவானது, "விளைவுகளின் அடிப்படையிலான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்" என்பதாகும். இதன் துணை கருத்துருக்கள் பின்வருமாறு :
    - கற்றல் மூலம் சாதித்துக் காட்டுதல்
    - தொழில்நுட்பக் கல்வியில் தொழிற்சாலையின் பங்கு
    - உயர் கல்வி நிறுவனங்களை மதிப்பிடுதல் மற்றும் தர வரிசைப்படுத்துதல் - அவர்கள் தர மேம்பாட்டில் பங்கு வகிக்கிறார்களா?
    - தரத்தை அரசு நிதியுடன் தொடர்புபடுத்துதல்
    - பரந்த எல்லைப் பரப்புகளின் அங்கீகாரத்தில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.

## கம்காஸா ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளானது தொலைத் தொடர்புகள் இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை (COMCASA - Communications Compatibility and Security Agreement) கையெழுத்திடுவதன் மூலம் இராணுவ மற்றும் பாதுகாப்பின் புதிய சகாப்தத்தை தொடங்கியுள்ளது.
- இரு நாடுகளுக்கிடையேயான 2+2 அமைச்சரவை பேச்சுவார்த்தை மூலம் இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது.
- இதன்மூலம் அமெரிக்க தொழில்நுட்பங்கள் மற்றும் மேம்பட்ட இராணுவ அமைப்புகளை இந்தியா பயன்படுத்த முடியும்.

- மேலும் 2019-ல் இந்தியாவின் கிழக்கு கடற்கரையோரமாக முப்படைகளின் பயிற்சியை இந்தியா மற்றும் அமெரிக்கா நடத்தவிருக்கிறது.
- இதற்குமுன் கடந்த ஆண்டு இந்தியா மற்றும் அமெரிக்காவானது பொதுப் பாதுகாப்பு இராணுவ தகவல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

### இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையேயான போர் பயிற்சி

- செப்டம்பர் 16 முதல் 29 வரை உத்தரகண்டின் சவ்பாட்டியாவில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் இராணுவ போர் பயிற்சியான 'யுத் அபயாஸ்' நடைபெறவிருக்கிறது.
- இப்பயிற்சியானது இரண்டு நாடுகளுக்கு இடையேயான தொடர்புகளை அதிகரிக்கவும் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் கவனம் செலுத்துகிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### சீனாவின் கடல்சார் செயற்கைக் கோள்

- கடல் நீர் மற்றும் பருவநிலை மாற்றத்தை புரிந்து கொள்வதற்கு உதவுவதற்காக சீனா கடல்சார் செயற்கைக் கோளை ஏவியது.
- இந்த HY-IC செயற்கைக் கோளானது கடலின் நிறம் மற்றும் கடல் நீரின் வெப்பநிலையை கண்காணிப்பதற்கு உதவும். மேலும் உலக கடல் சூழல் மீதான ஆராய்ச்சிக்குத் தேவையான அடிப்படைத் தகவல்களை இந்த செயற்கைக் கோள் அளிக்கும்.
- இந்த HY-IC செயற்கைக் கோளானது பச்சையம் மற்றும் மிதக்கும் வண்டல் செறிவுகள் ஆகியவற்றைக் கண்டறியும். மேலும் இது கடலின் மேற்பரப்பில் நிறம் மற்றும் நீரின் வெப்பநிலையை பாதிக்கும் கரைந்த கரிமப் பொருளைக் கண்டறியும்.
- இதன் மூலம் கண்டறியும் தகவலானது சீனாவின் கடல், தீவுகள் மற்றும் கடலோர மண்டலங்களின் வளங்கள் மற்றும் சூழல்கள் குறித்த கள ஆய்வுக்குப் பயன்படும். மேலும் இது கடல்சார் பேரிடர் மீட்பு மற்றும் கடல் வளங்களின் நீடித்த பயன்பாட்டுக்கு உதவும்.
- 2019-ல் செலுத்தப்படவிருக்கும் HY-ID-உடன் இணைந்து, HY-IC ஆனது சீனாவின் கடலின் தொலை உணர்வுத் திறனை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### சிங்பன் வனவிலங்கு சரணாலயம்

- நாகாலாந்து மாநில அரசானது சிங்பன் வனவிலங்கு சரணாலயத்தை யானைகள் காப்பகமாக அறிவித்துள்ளது.
- இது நாட்டில் 30-வது யானைகள் காப்பகம் ஆகும்.




- ❖ இந்த காப்பகம் அஸ்ஸாம் மாநிலத்தின் அபய்பூர் இருப்பு காட்டிற்கு (Abhaypur Reserve Forest) அருகில் அமைந்துள்ளது.
- ❖ நாகாலாந்து மாநிலத்தின் மாவட்டத்தின் தலைமை நகரான மூனிலிருந்து 65 கி.மீ. தொலைவில் இந்த யானைக் காப்பகம் அமைந்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## அரசு சேவைகளை வீடு தேடி வழங்குதல்

- ❖ தில்லி மாநில அரசானது நாட்டில் முதன்முறையாக செப்டம்பர் 10 அன்று பொது சேவைகளை வீடு தேடி வழங்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ இது ஓட்டுநர் உரிமங்கள், சாதிச் சான்றிதழ்கள், புதிய நீர் இணைப்புக் குழாய்கள் உள்ளிட்ட 40 வகையான பொதுச் சேவைகளை முதல் நிலையில் (Phase I) வீடு தேடி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இதை அம்மாநில அரசானது ‘நல்லாட்சியை வீடு தேடி வழங்குவதாக’ கூறியுள்ளது.
- ❖ சாகாயாகாஸ் என்ற அதிகாரிகள் மூலம் பொது சேவைகள் வீடு தேடி வழங்கப்படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## விமானப் படை அகாதமி - புதிய படைத்தலைவர்

- ❖ டுன்டிகலில் ஏர் மார்ஷல் அர்விந்திர சிங் புடோலா விமானப் படை அகாதமியின் படைத்தலைவராக பொறுப்பேற்றார் (AFA - Air Force Academy).
- ❖ புடோலா புது தில்லியில் உள்ள தேசிய பாதுகாப்பு கல்லூரி மற்றும் வில்லிங்டனில் உள்ள புகழ்பெற்ற பாதுகாப்புப் பணிகள் அதிகாரி கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார்.
- ❖ இவரது பணிக்காக இவருக்கு விமான ஊழியர்களின் பாராட்டிற்குரிய தலைவர், விமானப் படையில் கட்டளையிடும் அதிகாரி பதவி, விஷிஸ்து சேவா விருது மற்றும் வாயு சேனா விருது ஆகியவை வழங்கப்பட்டுள்ளது.

## சரளா புரஸ்கர்

- சரளா புரஸ்கரின் 39-வது பதிப்பு சரளா புரஸ்கர் குழுவால் அறிவிக்கப்பட்டது.
- ஒடிசா கவிஞரான சத்ருகனா பாண்டவ் தனது 'மிஸ்ரா துருபத்' என்ற கவிதைக்காக புகழ்மிக்க 'சரளா புரஸ்கர்' விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்.
- பண்டிட் உமேஷ் சந்திரா, என்பவருக்கு 'பாண்டா சங்கீத் சம்மன்' விருது வழங்கப்படவிருக்கிறது. பினோத் மோகரானா 'இலா பாண்டா சித்ரகலா சம்மன்' விருது பெற்றுள்ளார்.
- சரளா புரஸ்கர் விருது 1979-ல் புகழ்பெற்ற மறைந்த தொழிலதிபரான டாக்டர் பன்சிதர் பாண்டா மற்றும் மறைந்த இலா பாண்டா ஆகியோரால் நிறுவப்பட்டது.

# முக்கியச் செய்திகள்

## உலக பாலியல் சுகாதார தினம் - செப்டம்பர் 04

- உலகம் முழுவதும் பாலியல் சுகாதாரம் குறித்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 4-ம் தேதி உலக பாலியல் சுகாதார தினம் அனுசரிக்கப்படுகிறது.




- பாலியல் சுகாதாரத்தில் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்கும் உலக ஆலோசனை வழங்கும் நிறுவனமான பாலியல் சுகாதாரத்திற்கான உலக மன்றத்தால் இந்த விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- முதலாவது உலக பாலியல் சுகாதார தினமானது 2010 ஆம் ஆண்டில் 'அதைப் பற்றி பேசு' என்ற கருத்துருவுடன் அனுசரிக்கப்பட்டது.

## உலக தற்கொலை தடுப்பு தினம் - செப்டம்பர் 10

- உலக தற்கொலை தடுப்பு தினம் (WSPD - World Suicide Prevention Day) ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 10-ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.
- 2003 ஆம் ஆண்டு முதல் உலகெங்கிலும் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தற்கொலைகளை தடுக்க அர்ப்பணித்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் இதன் நோக்கமாகும்.




- உலக தற்கொலை தடுப்பு தினத்தை தற்கொலை தடுப்பிற்கான சர்வதேச மன்றமானது (IASP - International Association for Suicide Prevention) மனநலத்திற்கான உலக பெடரேஷனுடன் இணைந்து அனுசரித்தது.
- இந்த ஆண்டிற்கான கருத்துருவானது "தற்கொலைகளை தடுப்பதற்கு சேர்ந்து பணியாற்றுதல்" என்பதாகும்.

- - - - - - - - - - - - - - -